# பக்தி இலக்கியத்தில் பெண்கள்

முனைவர் ஞா.எலிசபத் ராணி
உதவிப்பேராசிரியர் தமிழாய்வுத்துறை
புனித சிலுவை தன்னாட்சிக் கல்லூரி
திருச்சிராப்பள்ளி – 02.

10

**ஆய்வுச்சுருக்கம்**

'அவனின்றி ஓர் அணுவும் அசையாது' என்பதற்கேற்ப இறைவனின்றி இவ்வுலகில் எந்த ஒரு நிகழ்வும் நடைபெறாது. அனைவருக்கும் அன்புள்ளத்தோடு அருள்புரியும் இறைவனை முழுமுதலாகக் கொண்டு ஒழுக அறிவுறுத்துவதே சமயங்கள் ஆகும். அவ்வகையில் அமைந்தவையே இந்து மதத்தினுள் இடம்பெறும் சைவ சமயமும், வைணவ சமயமும் ஆகும். சிவபெருமானையே முழுமுதற்கடவுளாகக் கொண்டது சைவசமயம், அச்சமயத்தை வளர்க்கவும் அதன் உயிர்வினை நிலைநாட்டவும் தோன்றியவர்களே அறுபத்து மூன்று நாயன்மார்கள். இவ் அறுபத்து மூவரின் நடுவிலே ஒளி விளக்காய் காட்சியளிப்பவர், பெண் நாயன்மாரான காரைக்காலம்மையார் ஆவார். சைவ சமயத்தைப் போன்றே வைணவசமயததின் முழுமுதற் கடவுளாகத் திகழ்பவர் திருமால் ஆவார். அச்சமயத்தின் உயர் தன்மையினையும், சிறப்பினையும் மக்கள் மத்தியில் பரவச் செய்ய உதவியவர்கள் பன்னிரு ஆழ்வார்கள் ஆவார். அவ்வாழ்வார்களுள் தனித்திறம் பெற்று சிறப்பிடம் பெற்றுத் திகழ்பவர் பெண் ஆழ்வாரான ஆண்டாள் ஆவார். சைவ சமயத்தின் உயர்வினைப் பரப்ப பெண் நாயன்மாரான காரைக்காலம்மையார், மங்கையர்கரசி மற்றும் திலகவதியார் போன்றப் பெண்கள் தங்களது பங்களிப்பினையும் பக்தி திறத்தினையும் நல்கினர்.

**திறவுச்சொற்கள்:** சாயுச்சியம் – ஆன்மா, சகமார்க்கம் - தோழமை நெறி, சன்மார்க்கம் - ஞானநெறி
பதி - தலைவன்ஃ இடம் ஃஇறைவன் இடர் – துன்பம் சாரூபம் – திருவுருவம்.

**முன்னுரை**

சமயங்கள் மனிதனை ஒழுக்கமுடன் வாழத் தூண்டும் தூண்டுகோல்கள் ஆகும். இதனை மாந்தர் தம் நெஞ்சம் எம்மதம், எவ்விறை என்று கருதுகின்றதோ; அம்மதம், அவ்விறை என்று அருள் பொழிவது இறைத் தத்துவம் என்பர். அவ்வாறு தம் மனதின் விருப்பப்படி சமயங்களின் வழிபடி இறைவனைத் தொழுது பாடியப் பாடல்கள் வழிபாட்டுப் பாடல்கள் ஆகும். இறைவனின் பெருங்கருணையையும் இறைத்திறத்தினையும், எல்லையில்லா ஆற்றலைக் கொண்ட இறைவனின் செயலினையும் அளவிட முடியாத அன்பினையும் நினைந்து போற்றிப புகழ்வதாக அமைந்தவையே பக்தி இலக்கியங்கள் ஆகும். இத்தகைய பக்திப் பாடல்கள் தோற்றம் பெற்றது பல்லவர் காலத்திலேயே ஆகும். எனவே பல்லவர் காலத்தைப் பக்தி இலக்கியக் காலம் என்று கூறுகிறோம். ஒவ்வொரு சமயமும், ஒவ்வொரு அறவுணர்வினைப் போதிக்கும் வகையில் அமைந்துள்ளன. இவற்றைப் போதிக்க உதவியது வழிபாட்டு முறைகளே ஆகும்.

இத்தகைய வழிபாட்டு முறைகளினாலேயே வளர்ச்சி அடைந்த பக்தி இலக்கியங்கள் தோன்றலாயின. வைதீக நெறி – சைவம் வைணவம் என்று இருதுறைகளாக வளர்ந்து சிறந்தது.

சைவ இலக்கியங்கள் அறுபத்து மூன்று நாயன்மார்களாலும் வைணவ இலக்கியங்கள் பன்னிரு ஆழ்வார்களாலும் பாடப்பட்டன. இறைவனைப் போற்றிப் பாடிய நாயன்மார்களுக்குள்ளும் ஆழ்வார்களுக்குள்ளும் பெண்கள் இடம் பெற்றுள்ளனர். அவ்வாறு பக்திப் பாடல்களையும் பதிகங்களையும் பாசுரங்களையும் இயற்றியப் பெண் அடியவர்களின் வாழ்க்கையை உள்ளடக்கியதே இவ்வியலாகும்.

**கலைச்சொற்கள் சாயுச்சியம் – ஆன்மா சகமார்க்கம் - தோழமை நெறி சன்மார்க்கம் – ஞானநெறி பதி - தலைவன்ஃ இடம் ஃஇறைவன் இடர் – துன்பம் சாரூபம் - திருவுருவம்**

**சைவ சமயம்:**

உலகின் தொன்மையான சமயங்களுள் ஒன்று சைவ சமயம். இது இதிகாசப் பழமையும், சாலப் பெருமையும் கொண்ட தெய்வீக சமயநெறி இதுவாகும். தமிழகத்தில் கி.பி. 7 ஆம் நூற்றாண்டிற்குப் பின்னர் சைவம் மாபெரும் வளர்ச்சிப் பெற்றது. நால்வர் பெருமக்கள் நாளெல்லாம், பொழுதெல்லாம் ஒவ்வோர் திருத்தலங்களுக்குச் சென்று தமிழிசையால் திருமுறைகள் பாடி சைவத்தை வளர்த்தார்கள். நாட்டு நலன் உழவாரப் பணி அன்னம் பாலிப்புத்தல் தண்ணீர்ப் பகிர்தல், போன்ற பல்வேறு சமுதாயப் பணிகளைச் சமயத்தின் பெயரால் செய்து காட்டினார்கள்.

**சைவத்தின் தொன்மை:**

சமயங்களுள் ஒன்றாகத் திகழும் சைவ சமயம் உலகின் தொன்மையான சமயங்களுள் ஒன்றாகும். மொகஞ்சதாரோவிலும், உலகத்துப் பிறவிடங்களிலும் காணப்பெற்ற லிங்கத் திருமேனிகள் கொண்டு சைவ சமயம் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்டது எனக் கூறப்படுகிறது. சங்க இலக்கியங்களிலே சிவபெருமானைக் குறித்தப் பெயர்கள் காணப்படுகின்றன. முக்கட் செல்வன், கரைமிடற்று அண்ணல். நீலமேனி வாலிழை பாகத்து ஒருவன். ஆலமர் செல்வன் முதலிய தொடர்கள் காணப்படுகின்றன.

**சைவ சித்தாந்தம்:**

சிவபெருமானது அருளைப் பெறுவதற்கு ஆன்மா தனது இயல்பையும், தனக்கும் ஆண்டவனுக்கும் உள்ள தொடர்பையும் அறிந்து கொள்ள வேண்டும். நம் உடம்பில் இருப்பது உயிர். அவ்வுயிரினுள் இருப்பது சிவம். ஆன்மாவானது இறைவனை முறையோடு வழிபட்டால் பாவவினைகள் ஒழியும்; சித்தமயம் அற்றுவிடும். அவர்கள் சிவமயமாகிச் சிவனானந்தப் பேற்றை அடைவார்கள். சைவ சித்தாந்தம் கூறும் நெறிகள் நான்கு. அவை சரியை, கிரியை, யோகம், ஞானம் என்பன. இந்நான்கு நெறிகளையும் சைவத் திருமுறைகள் விளக்கமாகக் குறிப்பிடும். இந்நெறியில் நிற்போருக்கு இறைவன் அருள்புரிவார்.

**நால்வகை நெறிகள்:**

“சரியை, கிரியை, யோகம், ஞானம் எனும் இந்நால்வகை நெறிகளும் முக்தி அடைவதற்கு தேவையான அடிப்படை ஒழுக்க முறைகள் ஆகும் ”1

**சரியை:**

'சரியை' என்பது சிவபெருமானது இறை உருவத்திருமேனியை வழிபடுவது இது புறவழிபாடாகும். இதனைத் 'தசமார்க்கம்' (தொண்டுநெறி) என்பர்.

"திருக்கோயிலில் அலகிட்டு, மெழுகிட்டு, மலர்பறித்து மாலை தொடுத்து இறைவனுக்குச் சார்த்தியும், சிவபெருமானின் சீர்மைய்யும், சிறப்பினையும் வாயாரப்பாடி ஒளிவளர் தீபங்கள் ஏற்றியும் , நந்தவனங்கள் அமைப்பதும் சிவனடியார்க்குத் தொண்டுகள் செய்வதும் ஆகியன சரியை நெறியில் அடங்கும்"2

**கிரியை:**

"இந்நெறியில் ஒழுகுவோர் நறும்புகை, நல்விளக்கு, திருமஞ்சனம், திருஅமுது முதலிய பூசனைப் பொருட்களைத் தேடியமைத்துக் கொண்டு ஐவகைத் தூய்மையாகிய பூதத் தூய்மை, இடத்தூய்மை, பொருட்தூய்மை, மந்திரத்தூய்மை, லிங்கத்தூய்மை என்பவற்றைச் செய்து, இறைவனுக்குரிய இடம், வடிவு ஆகியவற்றை மனதில் நினைந்து ஏற்படுத்தி மெய்யன்போடு, மலர்தூவிப் போற்றி, நாள்தோறும் வழிபடுவது கிரியை நெறியில் அடங்கும்"3

**யோகம்:**

சிவபெருமானை அருவத்தில் வழிபடுவது அகவழிபாடாகும். இதனை 'சகமார்க்கம்' (தோழமை நெறி) என்பர் "4

ஐம்பொறிகளைப் புலன்வழி செல்லாது தடுத்து, இருவகை மூச்சையும் அடக்கி, முக்கோணம் நாற்கோணம் முதலிய வடிவங்களை உடைய மூலாதாரம் முதலிய ஆறு ஆதாரங்களின் முறைமை அறிந்து, அவ்விடங்களில் பொருந்தி, தியானித்து சந்திர மண்டலத்தில் அமிர்தத்தை உடல் முழுவதும் நிரப்பிப், பேரொளிப் பிழம்பாகிய இறைவனின் வடிவை இடைவிடாது நினைத்திருத்தல் யோக நெறியில் அடங்கும். இந்நெறியில் ஒழுகுவோர் இறைவனின் திருவுருவத்தைப் (சாரூபம்) பெறுவர்" 6 சுந்தரது பாடல்கள் யோக நெறியை உணர்த்தும் தோழமை நெறியின் வகையில் அமைந்தவை ஆகும்.

**ஞானம்:**

"ஞானம் என்பது, சிவபெருமானை அறிவாலறிந்து வழிபடுவது இது அறிவு வழிபாடாகும். இதனைச் சன்மார்க்கம் (ஞானநெறி) என்பர் "5

பல நூல்களையும் ஆராய்ந்து பதி, பசு, பாசம் என்றும் மூன்று தத்துவங்களின் இலக்கணங்களைத் தெளித்து பண்டைய வினையின் பயனாக வந்த சிற்றவு முற்றும் நீங்கி, பேரறிவாகிய சிவஞானம் விரிந்து தோன்றும் மனத்தைப் பெறுதலாகும். "எல்லா கால ஞானங்களையும், புராணங்களையும் சாத்திரங்களையம் புறச்சமய நூல்களையும், நுணுகி ஆராய்ந்து இறை, உயிர், தளை என்ற முப்பொருள்களின் உண்மையை உணர்ந்து தெளிவதற்குரிய சிவஞானத்தைப் பெற்று, அறிவு, அறிபவன், அறிப்படுபவன் பொருள் என வேறுபடுத்தி உணர்தல் ஞானநெறியாகும். இந்த நெறியில் நிற்கும் பெருமை உடையவர்கள் சிவனை (சாயுச்சியம்) அடைவார்கள்"6

**திருஐந்தெழுத்து:**

'சிவாயநம' என்றும் 'நமசிவாய' என்றும் கூறப்படும் ஐந்தெழுத்து சைவ சமயத்தின் மந்திரமாகக் கொள்ளப்படும், இதனைச் சிவனுக்குரியக் குறியீடாகவும், திருமேனியாகவும் கூறுவர். ஐந்தெழுத்தை ஓதுவதால் பாவங்கள் நீங்கும் என்பது சைவ சமய நம்பிக்கை ஆகும்.

**சைவ சமய இலக்கியங்களில் பெண்கள்:**

அறுபத்து மூன்று நாயன்மார்களில் மூவர் பெண்கள். கி.பி. 3,4 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த காரைக்கால் அம்மையார் நாயன்மார்களில் காலத்தால் மூத்தவர் ஆவார். தான் பிறந்து வாழ்ந்த ஊரின் பெயராலேயே அழைக்கப்படும ; காரைக்கால் அம்மையாரின் இயற்பெயர் புனிதவதியார் ஆகும்.

மதுரையை ஆண்ட கூன் பாண்டியன் என்ற பாண்டிய மன்னன் நின்றசீர் நெடுமாற நாயனார் என்று அறியப்படுகிறார். அவர் மனைவி மங்கையர்கரசியார் என்பவர் நாயன்மார்களில் மற்றொரு பெண் ஆவார்.

திருநாவலூரைச் சேர்ந்த சடையனார் என்ற நாயன்மாரின் மனைவி இசைஞானியார் மூன்றாவது பெண் நாயன்மார் ஆவார். இவர்களின் மகன் சுந்தரமூர்த்தியார் சைவக்குரவர் நால்வருள் ஒருவரும், நாயன்மார்களில் ஒருவரும் ஆவார். கோயில் தொண்டில் இயற்கை நாயன்மாரின் மனைவி ஆகியயோர் சைவ சமயத்தில் தான் பாடிய சிறப்புமிக்க பதிகங்களாலும் பெருமை பெற்றவர் புனிதவதியார் எனப்படும் காரைக்கால் அம்மையார் ஆவார்.

**திருமடந்தை அவதரிப்பு:**

அழகுடைய காரைக்கால் நகரில் பெருமை வாய்ந்த வணிகர் பெருங்குடியின் தலைவனாகத் தனதத்தன் என்பவன் வாழ்ந்து வந்தான். தனதத்தன் நீண்ட நாட்களாய் தனக்கு மகப்பேறு வேண்டி இறைவனிடம் தவமிருந்தான். அத்தவத்தின் பயனால் அவனது குலம் செழிக்க தெய்வமே வந்து அவனுக்கு மகவாகப் பிறந்தது. அத்தெய்வ குழந்தைக்குப் புனிதவதியார் என்று பெயரிட்டனர். புனிதவதியார் வணிக குலத்தில் பிறந்த பிறகு வணிக குலம் மேலும் ஏற்றமும் சிறப்பும் பெற்று உயர்ந்தது.

"வங்கமலி கடற்கரைக் காலின்கான் வாழ்வணிகர்
தங்கன்குலத் தலைவனார் தனத்தெ னார் தவத்தால்
அங்கவர்பாற் றிருமடந்தை யவதரித்தா ளெனவந்து
பொங்கியபே ரழகுமிகப் புனிதவதி யார் பிறந்தார் "7

இப்பாடலின் வாயிலாக புனிதவதியார் பிறந்ததனால் உயர்வடைந்ததை அறிய முடிகிறது.

**இளமைப்பருவம்:**

புனிதவதியார் என்று அழைக்கப்பட்ட காரைக்கால் அம்மையார் இளம் வயதிலேயே சிவபெருமான் மீது அளவுகடந்த இறையுணர்வைக் கொண்டிருந்தார். நடைபயிலத் தொடங்கிய சிறு பருவத்திலேயே சிவபெருமான் திருவடிகட்டு ஆட்பட்டும் எல்லையற்ற அன்பும் கொண்டு சொற்களைப் பேசத் தொடங்கினார்.

"பிறந்து மொழிபயின்ற பின்னெல்லாங் காதல்
சிறந்து நின் சேவடியே சேர்ந்தேன் - நிறந்திகழும்
மைஞ்ஞான்ற கண்டத்து வானோர் பெருமானே
எஞ்ஞான்று தீர்ப்ப திடர் "8

என்ற பாடலடிகளின் வாயிலாக இளம் வயதிலேயே அம்மையாரிடம் இறையுணர்வு இருந்ததை அறிய முடிகிறது.

**மங்கலநாள் நிகழ்வு:**

பரமதத்தனுக்குப் புனிதவதியாரை மணம் செய்வதற்குத் தனதத்தன் இசைந்த நிலையில் இருந்தான். அப்போது நிதிபதிய மணநாள் குறித்து, அம்மண நாள் ஓலையைத் தனதத்தன் வீட்டிற்கு அனுப்பி வைத்தான். மங்கலச் செய்தியை மணமகள் வீட்டார் மகிழ்ச்சியோடு பெற்றனர். திருமண நிகழ்ச்சிக்குரிய அனைத்து செயல்களையும் காரைக்காலில் சிறப்பாக நடைபெற ஏற்பாடுகள் செய்தனர். புனிதவதியார், பரமதத்தனின் மணவிழா நடக்கவிருக்கும் அரங்கம் மிகவும் அழகுற அமைக்கப்பட்டது. மணப்பெண் வீட்டில் மணவிழா நடத்துவதே, அக்கால மரபு. அதன்படியே நிதிபதியின் குலமகனான பரமதத்தனுக்கு திருமணக்கோலம் புனைந்து மணமுரசுகளும், மங்கல வாத்தியங்களும் முழங்க சுற்றத்தார்கள் புடைசூழக் காரைக்காலுக்கு வந்தடைந்தார்கள். இதனைக் கீழ்வரும் பாடல் வாயிலாக அறியலாம். "மணம் இசைந்த நாள் ஓலை செலவிட்டு மங்கலநாள் அனையவது வைத்தொழில்கள் ஆனாலாம் அமைவித்தே இணர் அலங்கல் மைந்தனையும் மண அணியின் எழில் விளக்கிப் பணைமுரசம் எழுந்தார்ப்பக் காரைக்கால் பதிபுகுந்தார் "9

அன்றலர்ந்த அழகிய மலர்களைக் கொண்ட மாலை அணிந்த புனிதவதியாரையும், பரமதத்தனையும் சுற்றம் கூடி வரவேற்றனர். மணவிழாவானது, சுற்றத்தார் முன்னிலையில் அறநூல்கள் விதிப்படி திருமணச் சடங்குகள் செய்து, பரமதத்தன் புனிதவதியாரைச் சுற்றத்தார் போற்றும்படி மணம் முடித்தான்.

**அடியார்களுக்குப் பணி செய்தல்:**

இறைவனின் அடியார்களுக்குப் பணிவிடைச் செய்தலை மனையறமாகக் கொண்டு வாழ்ந்தார். தன் கணவராகிய பரமதத்தன் அடியார்களைப் போற்றும் குணநலம் பெறாதவன் ஆதலின் அவன் சென்று அடியார்களைத் தேடிக் கொண்டு வரும் நியதி இல்லை. பாங்கில் வரும் மனையறத்தின் பண்பு வழாமைப் பயில்வாராதலின் அம்மையார் தாம் மனைப்புறம் போய் அடியார்களை நாடி அழைத்து வரவும் வாய்ப்பில்லை. ஆதலால் அடியார்கள் தாமே தமது இல்லத்திற்கு வந்தணைந்தால், அவர்களுக்குத ; திருவமுதும், உயர்ந்த பொன்னும், நவரத்தின மணிகளும் ஆடைகளும், பொருட்களும் என்பவற்றை தகுதியறிந்து கொடுத்து வந்தார் புனிதவதியார்.

"நம்பர்அடி யார்அணைந்தால் நல்லதிரு அமுதளித்தும்
செம்பொண்ணும் நவமணியுஞ் செழுந்துகிறும் முதலான
தம்பரிவினால் அவர்க்குத் தகுதியின்வேண் குவகொடுத்தும்

உம்பர்பிரான் திருவடிக்கீழ் உணர்வுமிக்க ஒழுகும்நாள் ”10

இப்பாடல் தேவையானவற்றை நாடிவந்த அடியவரின் மீது கொண்ட அன்பின் பெருக்கத்தினால் கொடுத்து சிவநெறியும் காத்து வந்தார் என்பதை விளங்குகிறது.

**அம்மையே என்றழைக்கப்படுதல் :**

பேயார் பரமன் திருமுன் நெருங்கவே அவர் இவரை அம்மையே என உலகெலாம் உய்ய அழைத்தார். அது கேட்ட அம்மையாரும் ‘அப்பா’ என்றலறி, அவர் திருவடி வீழ்ந்து எழுந்தார்.

“அங்கணன் ‘அம்மையே’ என்று
அருள்செய் ‘அப்பா’ என்று
பங்கயச் செம்பொன் பாதம்
பணிந்து வீழ்ந்த எழுந்தார் ” 11

சிவபெருமானை ‘அப்பா’ என்று போற்றித் தாமரைப் போன்ற சிவந்த பாதங்களைப் பணிந்தார் என்றக் கருத்தை இப்பாடல் கூறுகிறது.

இறைவன் வரம் அருளுதல்:

“இறவாத இன்ப அன்பு
வேண்டிப்பின் வேண்டு கின்றார்
பிறவாமை வேண்டும்; மீண்டும்
பிறப்புண்டேல் உன்னை என்றும்
மறவாமை வேண்டும் ” 12

இறைவன் நீவிர் வேண்டும் வரம் யாது? என்று வினவ அம்மையோ, “என்றும் மறவாத அன்பு வேண்டும்; பிறவாமை வேண்டும் மீண்டும் பிறப்பு உளதாயின், என்றும் உன்னை மறவாமை வேண்டும். இன்னும் ஐயன் ஆடுகின்றபோது அடியேன் மகிழ்ந்து பாடிக் கொண்டு நின் திருவடியின் கீழே வருதல் வேண்டும ;” என்றார். இறைவனும் அது கூடும்படி அருள் செய்து எப்போதும் நம்மைப் பாடிக் கொண்டே இருப்பாயாக என்றருளிச் செய்தார்.

**பெரும்பேறு பெறுதல ;:**

பேயாரும் பெருமானைப் பணிந்த திருக்கயிலையினின்றும் போந்து தலையிலேயே கடந்து திருவாலங்காட்டினைச் சென்றடைந்தார். அங்கே ஆண்டவன் புரிந்தத் திருக்கூத்தினைக் கண்டு தொழுதார். ‘கொங்கை திரங்கி’, ‘எட்டி இலவம்’ என்னும் மூத்தத் திருப்பதிகங்கள் பாடிப்பரவினார். இங்ஙனம் ஐயனின் பொற்பாத நிழலில் என்றும் இருந்திருக்கும் பெரும் பேற்றினை எய்தினார்.

**மங்கையர்கரசியின் வாழ்வும் சிவத்தொண்டும்**:

கி.பி. ஏழாம் நூற்றாண்டில் பாண்டிய நாட்டை ஆட்சி செய்தவன் கூன் பாண்டியன் ஆவான். இவனை “நின்றசீர் நெடுமாறன் ” 36 என்று சுந்தரமூர்த்தி சுவாமிகள் திருத்தொண்டத் தொகையில் பாடியுள்ளார். சைவ சமய நாயன்மாருள் ஒருவராகிய மங்கையர்கரசி இவனது மனைவியாவாள். மங்கையர்கரசியின் இயற்பெயர் மானி என்பதாகும்.

"வரிவளையாள் மானி " 37 என்று சுந்தரமூர்த்தி சுவாமிகள் பாடுவது நோக்கத்தக்கது. மானி என்பதற்குப் பெருமையுடைய அம்மையார் என்பது பொருளாகும். சமயத் தொண்டின் சிறப்புக் கருதி,

"மங்கையர்க் கரசி வளவர்கோன் பாவை
வரிவளைக் கைம்மட மானி "13

என்று திருஞானசம்பந்தர் போற்றிப் பாடினார். "மங்கையர்கரசி" என்று சம்பந்தர் பாடியமையால் 'மங்கையர்கரசி' என்ற பெயர் நிலைத்தது. பெண்களுக்கெல்லாம் தலைவியாகப் பேறு பெற்றதனால் மங்கையர்கரசி என்ற காரணப் பெயர் பெற்றதாகவும் கூறுவர்.

"மண்ணெலாம் திகழ மன்னனாய் மன்னும் மணிமுடிச் சோழன்றன் மகளாமே" 13 வீரமிக்க வேந்தனான கூன் பாண்டியன் மதுரையைத் தலைநகராகக் கொண்டு பாண்டிய நாட்டை ஆண்டு வந்தான். உடல் கூனியிருந்தாலும் ஊக்கம் குன்றாக அவன் தமிழ் கூறும் நிலம் அனைத்திற்கும் உரிமையுடையவன் என்பது போலப் பல நாடுகளை வெற்றி கொண்டான். அந்நாடுகள் இவனுக்குத் திறை செலுத்தின. சேரநாடு முன்பே விருப்பமுடன் திறை செலுத்தும் நாடாக இருந்தது. சோழ நாட்டையும் வென்று அடிமைப்படுத்தினால் தமிழ்நாடு முழுமையும் ஒரு தடையின் கீழ் கொண்டு வந்த பெருமை கிடைக்கும் எனக் கருதினான். பொன்னி நாட்டின் மீது படையெடுத்துச் சென்று வென்றான்.

பொன்னி நாட்டின் பொன்னையோ, மணியையோ விரும்பாது சோழனின் மகள் மங்கையர்கரசியைத் துணைவியாக அடைய விரும்பினான். பாண்டியன் விருப்பத்திற்கு ஏற்பத் தன் மகளைக் கொடுப்பதற்குச் சோழன் இசைந்தான். தன் கருத்தினை மகளிடம் கூறித் தனக்கு இரங்கி மணம் செய்து கொள்ள வேண்டும் எனக் கேட்டான். தன் தந்தையைப் பாண்டியன் சினத்தினின்று விடுவிக்க மங்கையர்கரசி கருதினாள். பெற்றோர் இடும் கட்டளைக்குக் கீழப்படிந்து நடப்பவரே சிறந்த மக்களாவர் என்றும் உடல் கூனியிருப்பினும் உளக்கண் இல்லாத பாண்டியனைத் தான் மணப்பதாகவும் கூறினாள். மகளின் இசைவினைச் சோழன் பாண்டியனுக்குத் தெரிவித்தான். காலத்தைக் கூறுவோனை அழைத்து, நல்ல பொழுது பார்த்து, பல்வேறு நாட்டு மன்னர்கட்கும் மணவோலையை அனுப்பினான்.

பல்வேறு அணிகலன்களாகவும் அலங்காரம் பெற்றிருந்த மங்கையர்கரசியையும், வளையாத செங்கோலன் ஆகிய கூன்மாறனையும் நவமணிகளால் இயற்றப் பெற்ற மண்டபத்தில் ஏற்றினர். நல்லோர்கள் கூடியிருந்து அச்சபையில் வேதியர்கள் கூறிய விதிமுறைப்படி பொன்னாலாகிய மங்கலநாணை மங்கையர்கரசிக்குப் பாண்டின் சூட்டினான். இருவரும் தீயை வலம் வந்தனர். சீரோடும் சிறப்போடும் திருமணம் இனிது நிகழ்ந்தது.

சோழ மன்னன் வந்திருந்த மன்னர்களுக்கு விருந்தளித்தான். "தந்தையாகிய எனக்கே உறுதி பலவும் எடுத்துச் சொல்லும் இயல்பு வாய்ந்தவனாகிய மங்கையர்கரசி கணவனாகிய உனக்குச் செய்யப்போகும் சிறப்புகள் அளவிடற்கரியன. இத்தகைய பெண்ணைக் கொடுத்தது மட்டுமின்றி என் கண்ணின் பாவையை இயக்கும் உயிர் போன்று விளங்கக் கூடிய அமைச்சராகிய குலச்சிறையாரையும் உனக்குப் பரிசளிக்கிறேன்" என்று பாண்டியனுக்குப் பரிசாக சோழ மன்னன் வழங்கினான். மேலும், மகளுக்கும் மருமகனுக்கும் ஆராயந்தெடுத்து சில கருத்துக்கள் கூறினான்.

பின்னர் பாண்டியன் நங்கையோடும் நம்பியோடும் மதுரையை அடைந்தான். மன்னனைக் கண்ட மக்கள் ஆடலாலும் பாடலாலும் வரவேற்று ‘அமரர் பெருமான் இவர்களைக் காக்க’ என வாழ்த்தினார். ஆலவாய் அண்ணலைப் பணிந்து தனது அரண்மனையை அடைந்தான். காணவந்தவர்க்கெல்லாம் பெரும் பொருளையும் ஊர்களையும் வழங்கினான். குலச்சிறையார்க்கு அமைச்சர் பொறுப்பினை வழங்கிவிட்டு இனிதே இருந்தான்.

இக்கால எல்லையில் சமண சமய செல்வாக்குப் படிப்படியாக வளர்ந்து வந்தது. பண்டைய தீவினையால் கூன்மாறனும் அச்சமயத்தின்பால் பாண்டிநாடு முழுமையும் சமண சமயம் பரவலாயிற்று. நாடு முழுமையும் சமண சமயத்தின் பிடியில் சிக்கி இருந்தபோதும் மங்கையர்கரசியாரும் குலச்சிறையாரும் தங்கள் சைவ நெறியினின்றும் மாறாதிருந்தனர். மன்னன் நிலையையும் மக்கள் நிலையையும் எண்ணி மனம் வருந்தினர். ஒருவர்க்கு ஒருவர் உடன் பிறப்பாளர் போல ஒருவர் மற்றவர்க்கு ஆறுதல் கூறி வாழ்ந்து வந்தனர்.

தில்லையம்பலத்தினின்றும் வந்த அந்தணர் ஒருவர் சிவ சின்னங்களைப் பூண்டவராய் சிவவேடப்பொலிவு தோன்ற ஆலவாய் அண்ணலை வழிபட்டமையைக் குலச்சிறையார் வியப்புடன் நோக்கினார். சைவம் அருகிக் கிடந்த நாட்டில் சிவவேடப் பொலிவோடு விளங்கும் அவ்வந்தணரைக் குறுகிப் பணிந்து “சிவமே போல் தோற்றம் அளிக்கும் அந்தணரே எங்கேயிருந்து இவ்வூர்க்கு வந்து சேர்ந்தீர்? அம்மன்னன் என்னும் துன்பக் கடலினின்றும் பிழைத்துக் கரையேறக் குற்றமற்ற பற்றுக்கேடு உண்டோ எனக் கூறுவீராக” என்றார். அவ் அந்தணர் இவ்வுரைக்கு மறுமொழியாக சீர்காழி நகரில் சிவபாத இருதயர் என்பவருக்கு ஒரு குழந்தை பிறந்து மூன்றாண்டுகளில் ஞானப்பாலுண்டமையும், ‘தோடுடைய செவியன்’ பதிகம் பாடியமையும் கூறினார். அப்பெருமான் பொன்னி நாட்டுத்தலங்களை எல்லாம் தரிசித்துப் பின்னர் பாண்டி நாட்டுக்கு வருவார். அந்நாளில் இவ்வமணியிருள் நீங்கும்; சைவம் தழைத்தோங்கும் என்றார். இச்செய்தி மங்கையர்கரசியாரிடம் குலச்சிறையார் தெரிவித்தார்.

ஞான சம்பந்தரின் வரலாற்றைக் கேட்ட மங்கையர்கரசியார் வியந்தார். அவர் பால் ஓலையை விடுக்கக் கருதினார். ஒரு பாசுரம் எழுதி குலச்சிறையார் கையில் தந்து அந்தணரிடம் கொடுத்து அவரை ஞானசம்பந்தர்பால் விடுக்க என வேண்டிக் கொண்டார். குலச்சிறையாரின் வேண்டுகோளை ஏற்று அவ்வந்தணர் மறைக்காட்டினை அடைந்து ஞானசம்பந்தருக்கு எதிரில் ஓலையை வைத்தார்.

அத்திருமுகத்தை ஞானசம்பந்தார் பார்த்து மங்கையர்கரசியாருக்கு அந்நாட்டிற்கும் நேர்ந்த துன்பத்தைத் குறித்துக் கேட்டறிந்தார். உடனே மதுரைக்குச் செல்ல எழுந்த ஞானசம்பந்தரிடம், மதுரையம்பதிக்குச் செல்வதற்குமுன் நல்லநாள் பார்த்துச் செல்லுதல் நலம் எனத் திருநாவுக்கரசர் கூறினார். நாள்மீன் பார்ப்பதும், கோள்மீன் பார்ப்பதும் என்ன காரணமோ? நல்ல விடை தாருங்கள் என்று கூறி வரைவாகப் புறப்பட்டார். வாடுகின்ற பயிர்களுக்கு மழை மனமிரங்கி வந்தாற் போன்று ஞானசம்பந்தர் வந்தார், என்று மங்கையர்கரசியாரும் அமைச்சரும் மகிழ்ந்து வரவேற்றனர்.

ஞான சம்பந்தரின் வருகையை அறிவிக்க பரிச்சின்னங்களின் ஓசைகள் மங்கையர்கரசியின் செவிக்கு அமுதாகவும், சமணர்கட்கு விடமாகவும் ஒலித்தன. சமணர்கள் பொறாமையுடைய மனிதராய் ஞானசம்பந்தர் செல்லும் வழியைத் தடுத்து நின்று பலவாறாக இகழ்ந்துப் பேசினர். ஆனால் ஞானசம்பந்தர் வாய்பேசாது சென்று ஆலவாய்ப் பெருமானைப் பணிந்து, பின் அங்குள்ள மடத்தில் தங்கினார். ஞானசம்பந்தரின் வருகையைச் சமணர்கள் அரசனுக்குத் தெரிவிக்கச் சென்றனர். செல்லும் வழியில் பல தீ நிமித்தங்களைக் கண்டனர். மன்னன் அவையை அடைந்த அவர்கள் திருநீறு அணிந்தவர்கள் வீதிகளில் செல்வதைக் கண்டதால் ‘கண்டு முட்டு’ அடைந்தோம் என்று வருந்திக் கூறினர்.

மன்னன் இச்சொற்களைக் கேட்டமையால் ‘கேட்டு முட்டு’ உற்றதாகக் கூறினான். மேலும் இத்தீவினை போக்குதற்குரிய வழியினை ஆராய்ந்து செய்விக்க வேண்டுமென்று வேண்டினான். தமக்குப் பகைவராகிய ஞானசம்பந்தரை மந்திரத்தினால் தீயூட்டி அவர் தங்கியுள்ள இடத்தினின்றும் அகற்றச் செய்வோம். நீ அஞ்சவேண்டாம் என்று கூறி அவையை விட்டு அகன்றனர். வெப்புபோக்க ஞானசம்பந்தர் தொடங்கும்போது அவரிடம் உள்ள திருநீற்றைப் பயன்படுத்தக் கூடாது என்று கூறினார்.

அதனால் மடைப்பள்ளியினின்றும் சாம்பலை எடுத்து வருமாறு கூறி வெப்பைத் தீர்த்தார். இடப்பாகத்தின் வெப்பத்தை மாற்ற முடியாத சமணர்கள் வலப்பாக வெப்பு நோய் தங்கள் மயிற்பீலியாலேயே தீர்ந்தது எனக் கூறினர். இடப்பாகத்தின் வெப்பை மாற்றுவதற்குச் சமணர்கள் மயிற்பீலி தடவினர். ஆனால் வலப்பக்க நோயும் இடப்பக்கத்தில் சேர்ந்த மன்னனுக்கு மிகுந்த துன்பத்தைத் தந்தது. இரட்டித்த வெப்பு நோயால் சீற்றத்துக்கு உள்ளாகி;ச் சமணர்களை எதிரில் நிற்காது சென்றிடுமின் என்றான். மன்னன் படுந்துயரைக் காட்டினும் மங்கையர்கரசி உற்ற துன்பம் கூறுதற்கு அடங்காது என்று கருதியவராய்த் திருநீற்றினால் இடப்பாக வெப்பினையும் போக்கினார். வெப்புநோய் நீங்கிய அளவிலேயே பிறவி முதல் தோன்றிய கூறுடலும் நிமிர்ந்தெழுந்து ‘நின்றசீர் நெடுமாறன்’ ஆனான். அனைவரும் காணுமாறு எழுந்து ஞானசம்பந்தர் அடிமலர்களைத் தன் தலைமேற் கொண்டு பணிந்தான்.

மன்னன் நோயும் நீங்கி, கூனும் நிமிந்ததைக் கண்ட சமணர்கள் தங்களுள் பலவாறாக வாதிட்டுக் கொண்டனர். முடிவில் ‘அழிய வருங்கால் வாழாமைம்யே முன் இனிது’ என்றெண்ணியவராய் ஞானசம்பந்தரை வாதுக்கு அழைப்பது என்ற மனதுடன் மன்னன் அவையை அடைந்தனர். மன்னனிடம் தாங்களே வென்றதாகக் கூறினர். மன்னனோ எம்மை நெருங்கியிருந்த நீங்கள் இனிமேல் எம்முடைய நாட்டில் ஒரு விநாடி கூட இருக்காதீர்கள் எனக் கூறினான்.

ஞானசம்பந்தரிடம் தாங்களே வென்றதாகக் கூறிய சமணர்கள் அவரை நாட்டைவிட்டுச் செல்லும்படி கூறினார். அதற்கு ஞானசம்பந்தர் தமது வெற்றியை விளக்கினார். அதனை ஏற்றுக் கொள்ளாத சமணர்கள் ஞானசம்பந்தரை வாதுக்கு அழைத்தனர். வாதுக்கு இசைந்த ஞானசம்பந்தர் போட்டியில் தோற்றப்பின் அதற்கான தண்டனையையும் அவர்களே நிச்சயிக்குமாறு கூறினார்.

அதற்கிசைந்த சமணர்கள் நீர்வாதும், நெருப்புவாதும் செய்தல் வேண்டும் என்றும் தோற்றவர்கள் கழுவேற வேண்டும் என்றும் முடிவு செய்தார். முதலில் தங்கள் ஏடுகளை நெருப்பிலிட்டனர். ஞானசம்பந்தர் இட்ட ஏடு முன்பு இருந்ததை விடவும் பொன் ஏடுபோல் ஒளிர்ந்தது. சமணர்கள் இட்ட ஏடு கரித்து போயிற்று. பின்னர் அரசனுக்கு முன்பாக வைகை ஆற்றில் ஏட்டினை இட்டனர். அப்பொழுதும் சம்பந்தர் இட்ட ஏடு ஆற்றினை எதிர்த்துச் செல்ல சமணர்கள் இட்ட ஏடு ஆற்றில் எதிர்த்துச் செல்லாமல் ஆற்றின் போக்கில் சென்றது.

இதனைக் கண்ணுற்ற அரசன் 'சிவபெருமானுக்குப் பெருமை சேர்த்தமைக்கு காரணம் ஆயினாற் போன்று ஞானசம்பந்தரின் பெருமை நீர், நெருப்பால் வெளிப்பட்டது' என்று கூறி சமணர்கள் தோற்றமையை எடுத்துக் காட்டி;னான். வாது செய்வதில் தோற்றவர் கழுவினுக்கு இரையாவர் என்று நீங்களே கூறினீர்கள் அந்த ஒன்றையேனம் செய்க எனச் சினந்து கூறினார். 'ஓர் விநாடி கூட உயிர் தரித்திருத்தல் நன்றன்று! என்று மானம் தாங்காத அவர்களில் ஆயிரவர் கழுவேறினர். கழுவேறாது நின்ற ஏனையவர்களைப் பார்த்த அரசன், குலச்சிறையாரின் கருத்திற்கேற்ப 'இவர்கள் தங்கள் அறியாமையை உணர்ந்து திருந்துவார்களானால் கழுவேறவேண்டாம் என்பதில்லை' எனக் கூறினான். ஞானசம்பந்தர் அரசனையும், அரசியையும், அமைச்சரையும் வாழ்த்தினார். ஞானசம்பந்தர் கூறியவற்றைக் கேட்ட அரசனும், மங்கையற்கரசியும் மனம் மகிழ்ந்தனர். ஞான சம்பந்தரின் அடிகளை முடிமேல் ஏற்றி வணங்கினர்.

**சைவ சமயத்தில் திலகவதியார்:**

சமயக் குரவர்கள் நால்வருள் ஒருவராகத் திகழும் திருநாவுக்கரசர் தமக்கையாரே திலகவதியார் ஆவார். சைவ சமயத்தில் இருந்து சமண சமயத்திற்குச் சென்ற திருநாவுக்கரசரை மீண்டும் சமயத்தை தழுவச் செய்தவரும் திலகவதியாரே ஆவார். தம் தமக்கையராகிய நாவுக்கரசர் சைவ சமயத்திற்கு வர வேண்டும் என்று சிவனை இறைஞ்சி வேண்டினார். இந்நிலையில் சிவபெருமான் தருமசேனருக்கு சூளை நோயைக் கொடுத்து துன்புறச் செய்தார். இவ்வாறு சூளை நோயினால் துன்புற்ற அப்பரைத் திலகவதியார் திருநீற்றால் நலம்பெறச் செய்தார். இதனால் சூளைவலி நீங்கி திருநாவுக்கரசர் எம்பெருமானை வணங்கினார். அப்போது அவர் பாடிய முதல் பதிகம்

"கூற்றாயின வாறு விலக்ககிலீர்

கொடுமை பல செய்தன நான் அறியேன் "14

என்ற பதிகத்தைப் பாடி சைவ சமயத்திற்கு மாறினார். பிறகு பெருமானைப் போற்றி பல பதிகங்களைப் பாடினார். இவ்வாறு திருநாவுக்கரசர் சைவ சமயத்திற்கு மாறியதற்குக் காரணமாக திலகவதியார் விளங்கியுள்ளார் எனலாம்.

**பன்னிரு ஆழ்வார்களுள் ஆண்டாள்:**

வேதமனைத்திற்கும் வித்தம் ஞானப்பெண் பாவை கோதை ஆண்டாள். பூமகளாயத் தோன்றி நாமகளாய் நானிலம் போற்றும் நற்றமிழ் பாசுரங்களை நவின்றாள். உலகு உய்யத் தோன்றி உத்தமன் கைத்தலம் பற்றி, பெற்றிமையெய்தி, மானிடரெல்லாம் போற்றும் தெய்வத்தமிழ் பெண்ணானாள் ஆண்டாள். வையத்து வாழ்வாங்கு வாழ்ந்து வானுறையும் தெய்வத்தை அடையும் நெறியை உணர்த்தி நின்றாள்.

கண்ணனை வாயினால் பாடி மனத்தினால் சிந்தித்து வழிபடுவோமேயானால் தொல்லை நீங்கி ஆனந்தம் எய்தி திருவருள் பெறுவோம் என்பதை அழகுத்தமிழ் பாசுரங்களால் எடுத்துரைத்தாள்.

**ஆண்டாளின் திருஅவதாரம்:**

"தூய மலர்க்காவில் துளசிச் செடியருகில் சேயாய்க் கிடந்த திருமகளே – வாய்மைப் பெரியாழ்வார் கண்டெடுத்த பெண்பிள்ளை – கோதை விரித்த திருப்பாவை வித்து " 15 வைணவ ஆழ்வார்களில் ஒருவரான பெரியாழ்வார் திருவில்லிபுத்தூர் வடபெருங்கோயிலில் எழுந்தருளியுள்ள பெருமாளிடம் பக்தி கொண்டவர். இவர் நந்தவனம் அமைத்து வழிவழியாய் திருமாலுக்குத் துளவத் தொண்டாற்றும் பூர்வீகக் குடும்பத்தினர், இவருக்குப் பிள்ளையில்லா குறைநீங்க நந்தவனத்தில் திருத்துழாயச் செடியருகில் திருமகள் ஆண்டாள் அவதரித்தார். இவர் ஒருவரே ஆழ்வார்களில் பெண் அவதாரி, சூடிக் கொடுத்த சுடர்கொடி வேதப் பயன் கொள்ள வல்லவரான விட்டுணு சித்தர் போல இயல்பாகவே அவரது மகள் ஆண்டாளும் கண்ணன்பால் காதல் கொண்டாள். பெருமாள் சேவைக்கு நாளும் பெரியாழ்வார் மலர் மாலைகளை அளித்து வந்தார். பெருமாளுக்குச் சாத்தும் மலர் மாலைகளை ஆண்டாள் தானே சூடி அழகு பார்த்தாள். அதன்பின் அரங்கனுக்கு அனுப்பி வைத்தாள். இச்செயலைக் கண்ட பெரியாழ்வார் கோதையின் செயலைப் பேதமை என்று கண்டித்தார். ஆனால் பரந்தாமன் ஆண்டாள் சூடிய மாலையே தனக்கு உகப்பதாகவும், ஆண்டாள் அணியாத மாலை தனக்கு வாதை செய்வதாகவும் ஆழ்வாரின் கனவில் தோன்றி நவின்றான். அரங்கன் உள்ளத்தை ஆண்டு கொண்டவளாகப் பாவை மாறியதால் அவளை ஆண்டாள் என்றாள் பெரியாழ்வார். இந்நிலையில் கண்ணனை எண்ணி துயரடையும் ஆண்டாளுக்கு பெரியோர்கள் நோன்பு பற்றிக் கூறுகின்றனர்.

**இறைவனோடு இரண்டறக் கலத்தல்:**

அழகிய மணவாளன் திருமண்டபத்தில் தட்டுப்பாயை நீக்கி, சூடிக்கொடுத்த நாச்சியாரை அனைவரும் காணும்படி செய்தார். அதன்பிறகு பட்டுச் சேலையும், சுற்றிய செங்கழுநீர் மாலையும் திருநுதற் கஸ்தூரித் திருநாமமும் காதளவு ஓடிய கயல்போல மிளிரும் கடைக்கண் விழியும் உடையவராய் கொங்கை குறுங்கச் சிலம்பார்க்கச் செய்து வளையொலிப்ப பொன்னாடை கொண்டு அழகிய மணவாளன் முன்பு சென்றார். உள்ளே புகுந்து கண்கள் ஆரக்கண்டு இறைவனோடு இரண்டறக் கலந்தார். ஆழ்வாரும் இருவருக்கும் விடைகொடுத்து முன்போலத் திருமாலின் தொண்டாற்றி வாழ்ந்து வந்தார். வேண்டியும் அக்குயில் அங்ஙனம் செய்யவில்லை. எம்பெருமானைக் காண வேண்டுமென்ற ஆவல் அதிகமாய் விட்டது. ஆனால் அவனைக் காண்பதற்கு இயலவில்லை. அவனும் விரைவாக வந்து முகங்காட்டவில்லை. என்று ஆண்டாள் எம்பெருமானை எண்ணி ஏக்கமுறுவதாக நாச்சியார் திருமொழிப் பாடல்கள் அமைந்துள்ளன. பொதுவாக ஆண்டாளுடைய பாடல்களில் இளமை மணம் வீசுகிறது. காதலின் புதுமை பொலிகிறது. பள்ள மடையில் பாயும் வெள்ளம் போல் உணர்ச்சிப் பெருக்கெடுத்து ஓடுகிறது. ஆண்டாளின் பக்தி கரைபுரண்டு ஓடும் காதல் வெள்ளமாகும். இறைவனைக் காதலனாகவும் தன்னைக் காதலியாகவும் எண்ணி இவர் இயற்றிய இரண்டு பாசுரங்களுமே அகப்பொருள் இலக்கணத்திற்கு எடுத்துக்காட்டாக விளங்குகின்றன.

**தொகுப்புரை:**

பக்தி இலக்கியக் காலப் பெண்களின் படைப்புத் திறனுக்கு முன்னோடியாக காரைக்கால் அம்மையாரும், ஆண்டாளும், மங்கையர்கரசியும் திகழ்ந்துள்ளனர். பெண்களின் பக்தித் திறன், இறை உணர்வு, பாடல் இயற்றும் வல்லமை, தொண்டு செய்யும் மனப்பாங்கு ஆகியவற்றை எடுத்தியம்புவதாக இவர்களது 59 பாடல்களும் பதிகங்களும், பாசுரங்களும் அமைந்துள்ளன. மேலும், இவர்களின் வாழ்க்கை வரலாறுகளின் வாயிலாக சைவ சமயத்திற்கும் வைணவ சமயத்திற்கும் செய்த தொண்டுகளை அறிய முடிகிறது.

**சான்றெண் விளக்கம்:**

1. அ.வே. சாந்திகுமார சுவாமிகள், முத்துக்குமாரசுவாமி பிள்ளைத்தமிழ், சைவ சித்தாந்தக் கருத்துக்கள், ப. 159
2. சிவஞான சித்தியார், சுபக்கம் ப. 271
3. சிவஞான சித்தியார், மு.கு.நூ., ப. 272
4. அ.வே. சாந்திகுமார சுவாமிகள், முத்துக்குமாரசுவாமி பிள்ளைத் தமிழ், சைவசித்தாந்தக் கருத்துக்கள் ப. 161
5. அ.வே. சாந்திகுமார சுவாமிகள், மு.கு.நூ., ப. 161
6. சிவஞான சித்தியார், மு.கு.நூ., ப. 274
7. காரைக்காலம்மையார் புராணம் , பா.எண். 1718
8. கதிர் முருகு, அற்புதத் திருவந்தாதி, பா.எண். 1
9. காரைக்காலம்மையார் புராணம் , பா.எண். 1726
10. மேலது, பா.எண். 1731
11. மேலது, பா.எண். 59
12. மேலது, பா.எண். 60
13. திருஞான சம்பந்தர், தேவாரம், ப. 561
14. மேலது, ப. 561
15. கா.கோ. வேங்கடராமன், தமிழ் இலக்கிய வரலாறு, ப. 174
16. ச. முருகன், வைணவ வேதம், ப. 81

**துணைநூற் பட்டியல்:**

1. . கதிர் முருகு -அற்புதத் திருவந்தாதி மூலமும் உரையும் சாரதா பதிப்பகம், ஜி 4 சாந்தி அச்சகம் 3 ஸ்ரீ கிருஸ்ணாபுரம் தெரு ராயப்பேட்டை சென்னை. முதற்பதிப்பு ஆகஸ்ட் 2007
2. சதாசிவ செட்டியார் - தேவாரம், சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம்,சென்னை முதற் பதிப்பு 1927.
3. சாந்திகுமாரசுவாமிகள் - முத்துக்குமாரசுவாமி பிள்ளைத் தமிழ் சைவசித்தாந்தக் கருத்துக்கள் 24 பலாமி வளாகம் சாஸ்வத் இல்லங்கள் புதிய நந்தம் சாலை மதுரை முதற் பதிப்பு டிசம்பர். 2006.

4. சாமி (ப.ஆ) மங்கையர்கரசி வெண்பா, செவ்வேள் வெளியீடு அண்ணாமலை நகர், சிதம்பரம் முதற் பதிப்பு 1986

5. மூல உரை தேவாரம் காசிமடம், திருபனந்தாள், மூன்றாம் பதிப்பு 1971.

6. வேங்கடராமன். கோ. - தமிழ் இலக்கிய வரலாறு, கலையக வெளியீடு 193 கண்டகர் நகர், பரமத்தி வேலூர், நாமக்கல் முதற்பதிப்பு ஜூலை 2001.